# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2441/07 - 2025 ජූනි මස 17 වැනි අඟහරුවාදා - 2025.06.17

*2441/07 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78* (XVI) (C)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
*2025.06.12.*

**கட்டளைச் சட்டம்**

*2005 ஆம் ஆண்டு யூன் 06 ஆந் திகதிய 1396/4ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2005 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகக் கட்டளைச் சட்டம் ஆனது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.*

*(1)* அதன் 4 ஆம் பந்தியில் (எ) என்னும் உட்பந்தியில் , ''கலையரங்குகளையும் நாடக அரங்குகளையும் அத்துடன் வேறு கட்டிடங்களையும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''கலையரங்குகளையும் நாடக அரங்குகளையும் அச்சிடும் நிலையமொன்றையும் கலைக்கூடமொன்றையும் அத்துடன் வேறு கட்டிடங்களையும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்:-

*(2)* அதன் 5 ஆம் பந்தியில் (iii) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

(iii) ''கற்கைப் பகுதி,''


1A - PG 7153 — 54 (2025/06)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(3) அதன் 7ஆம் பந்தியில் :-

(அ) உட்பந்தி (5) இல் “பல்கலைக்கழகப் பதிவாளர்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட நிறுவகத்தின் கற்கைப் பகுதியொன்றின் தலைவர்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) உட்பந்தி (6) இல் “பல்கலைக்கழகப் பதிவாளர்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட நிறுவகத்தின் கற்கைப் பகுதியொன்றின் தலைவர்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(4) அதன் 8ஆம் பந்தியில் :-

(அ) உட்பந்தி (1) இல் “முகாமைச் சபையினதும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “சபையினதும்” என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(ஆ) உட்பந்தி (3) இல் “முகாமைச் சபையின் ” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “சபையின் ” என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(இ) உட்பந்தி (5) இல் “பல்கலைக்கழகத் துணைவேந்தரின் ” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “சபையின் ” என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(5) அதன் 9ஆம் பந்தியில் (1) ஆம் உட்பந்தியியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

“(1) பதவிவழி உறுப்பினர்களாக, அதாவது-

(அ) பணிப்பாளர் ;

(ஆ) கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(இ) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(ஈ) இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் கலாசார பீடத்தின் பீடாதிபதி;

(உ) நிறுவகத்தின் கற்கைத் துறை ஒவ்வொன்றினதும் தலைவர்கள்; அத்துடன்”,

(6) அதன் 10ஆம் பந்தியில் :-

(அ) உட்பந்தி (1) இல் “பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராதல்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “பணிப்பாளராதல்” என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(ஆ) உட்பந்தி (3) இல் “ஆணைக்குழுவின் தவிசாளருக்கு அல்லது துணைவேந்தருக்கு” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “பெயர் குறித்து நியமிக்கும் அல்லது நியமிக்கும் அதிகாரிக்கு ” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(7) அதன் 12ஆம் பந்தியில் :-

(அ) உட்பந்தி (1) இன் (ஆ) என்னும் உப - பந்தியில் , “ஒவ்வொரு கற்கைப் பகுதியினதும் துறைத்தலைவர் ” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ஒவ்வொரு கற்கைப் பகுதியினதும் துறைத்தலைவர்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) உட்பந்தி (1) இன் (இ) என்னும் உப - பந்தியில் “நுண்கலைத்துறையின் ” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “நுண்கலைத் துறையின்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(இ) உட்பந்தி (1) இன் (ஊ) என்னும் உப- உட் பந்தியில் , “கற்கைத் துறையிலிருந்தும் ” என்னும் சொற்களுக்குப் பதிலாக , “கற்கைத் துறையிலிருந்தும்” என்னும் சொற்களை இடுவதன் முலமும்;

(ஈ) உட்பந்தி (1) இன் (எ) என்னும் உப - உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்;

"(எ) பந்தி (ஊ) இல் குறிப்பிடப்பட்ட உறுப்பினர்கள் தவிர்ந்த , கற்பித்தலில் ஈடுபட்டுள்ள நிறுவகத்தின் நிரந்தரப் பணியாட்டொகுதியினரிடையேயிருந்து தெரிவு செய்யப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்; அத்துடன்,

(ஏ) விடயத்துக்கேற்ப, நிறுவகத்தின் சிரேஷ்ட உதவி நூலகர் அல்லது நூலகத்தின் தலைவர்.";

(உ) உட்பந்தி (3) இல். "பந்தி II என்பதன் " என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் , "பந்தி 10 என்பதன்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்,

(8) அதன் 14 ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, பின்வருதனை இடுவதன் மூலமும்:-

"14. (1) பின்வரும் கல்விக்கிளைகள் தொடர்பில் கற்கைத் துறைகள் இருத்தல் வேண்டும் -

(அ) கர்நாடக இசை;

(ஆ) நடனம், நாடகம் மற்றும் அரங்கேற்றற் கலைகள் ;

(இ) கட்புல மற்றும் தொழில்நுட்பவியல் கலைகள் ; அத்துடன்

(ஈ) தகவல் தொழில்நுட்பவியல்.

(2) கற்கைத்துறை ஒவ்வொன்றும் ஒரு சிரேஷ்ட பேராசிரியராக, பேராசிரியராக, இணைப்பேராசிரியராக அல்லது சிரேஷ்ட விரிவுரையாளராக இருக்க வேண்டியவரான துறைத்தலைவர் ஒருவரைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அவர் பணிப்பாளரின் விதப்புரையின் மீது சபையால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

(3) துறைத்தலைவர், அவரது நியமனத் திகதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, அவர் மீள் நியனத்திற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(4) லீவு காரணமாக, சுகயீனம் காரணமாக அல்லது வேறு ஏதுவின் காரணமாக துறைத்தலைவர் ஒருவர் மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அவரது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதிருக்குமிடத்து, சபையானது அத்தகைய காலப்பகுதிக்கு துறைத்தலைவரின் பதவியில் பதிற்கடமையாற்றுவதற்கு ஒரு பேராசிரியரை , இணைப்பேராசிரியரை அல்லது சிரேஷ்ட விரிவுரையாளரை நியமித்தல் வேண்டும். ஆயினும் துறைத்தலைவரொருவர் ஓய்வு பெறுமிடத்து அல்லது பதவிவிலகுமிடத்து அல்லது வேறு காரணங்களுக்காக மூன்று மாதங்களை விஞ்சுகின்றவொரு காலப்பகுதிக்கு அவரது பதிவிக்குரிய கடமைகளை நிறைவேற்ற இயலாதிருக்குமிடத்து துறைத் தலைவரின் பதவி வறிதாயிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் (2) ஆம் உட்பந்திக்கிணங்க புதிய துறைத் தலைவரொருவர் நியமிக்கப்படுதலும் வேண்டும்.".

EOG 06 - 0125

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.